O.S.50-2017

## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.50/2017

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ரெங்கையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரெங்கையா | வயது | : | 88/24 |
| தகப்பனார் பெயர் | : | மாரியப்பன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | விவசாயம் |

நாள்-28.03.2024

பி.வா.சா.1

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1) நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 மோசடியான ஆவணம் என்றாலும், அந்த ஆவணத்தின் மூலமாக பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

2) பி.வா.சா.ஆ.1ல் சர்வே எண்கள் இல்லை என்றால் சரிதான். அதற்கு ஸ்தல பெயர் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான்.

3) பி.வா.சா.ஆ.1ல் இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) பி.வா.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களுக்கு நான்கெல்கைகள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

5) பி.வா.சா.ஆ.1 மூலமாக பாகம் வரையறுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6) நான் சொல்லும் பஞ்சாயத்தார்களின் பெயர்கள், தகப்பனார் பெயர் மற்றும் விலாசம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7) பி.வா.சா.ஆ.1 மாதிரியான நோட்டை எப்பொழுது வேணாலும் யாராலும் தயார் செய்ய முடியும் என்று சொன்னால் சரியல்ல.

8) நான் பூர்வீக வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நீதிமன்றம் மூலமாக பாகம் பிரிக்கும்போது, அந்த வீட்டில் நான் குடியிருப்பதால் எனக்கு ஒதுக்கிவிட வேண்டும் என்றால் சரியல்ல.

9) பி.வா.சா.ஆ.5ல் நிறைய அடித்தல், திருத்தல்கள் உள்ளது என்றால் சரியல்ல.

10) பி.வா.சா.ஆ.5 ஆவணத்திற்கான பத்திரம் என் பெயரில் வாங்கப்பட்டது.

மு.மா.நீ,

மேற்படி ஆவணம் கையால் எழுதப்பட்டது. அதை பெருங்களூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ஒருவர் எழுதினார். மேற்படி ஆவணம் எழுதுவதற்கான விபரங்களை நான்தான் சொன்னேன். அந்த ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று ஞாபகம் உள்ளது.

11) பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 3 அயிட்ட சொத்துக்கள் விபரம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் சொத்திற்கான தலப்பெயர்கள் சொல்லப்பட்டுள்ளது.

12) பி.வா.சா.ஆ.5ல் கண்டுள்ள சொத்துக்களின் சர்வே எண்கள் தவறாக உள்ளது என்றால் சரியல்ல.

13) பி.வா.சா.ஆ.5ல் கண்டுள்ள இரண்டு சொத்துக்களின் விஸ்தீரணம் 5 குழி ஆகும். மேற்படி ஆவணத்தில் சாட்சிகளாக உலகன் மற்றும் கருப்பையா ஆகியோர்கள் கையெழுத்து போட்டார்கள். அவர்கள் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றாலும், அப்படியொரு நபர்களே இல்லை என்றாலும் சரியல்ல.

14) நத்தத்தில் கருப்பையா பெயரில் இரண்டு செண்ட் இடத்திற்கு பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து கருப்பையாவிற்கு பாத்தியப்பட்ட தனித்த சொத்து என்றால் சரியல்ல.

15) அந்த சொத்து நத்தம் சொத்து என்றாலும், அது பூர்வீக சொத்து இல்லை என்றாலும் சரியல்ல.

16) நான் கிரையம் கொடுத்த பத்திரத்தில் எனக்கு கிரையம் கிடைத்த சொத்து என்று கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கிரையம் கொடுத்து சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்றாலும், அனைத்திலும் பாகம் கிடைக்ககூடியது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.